THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 6th August 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the Clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

Pension

* 141 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of pension cases pending disposal, for more than a year;

(*b*) the reasons for the delay; and

(*c*) whether there is any proposal to evolve methods for speedy disposal of pending cases?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 282 pension cases were pending disposal for more than a year in December, 1965.

(*b*) Delays in finalisation of pension cases are attributable to one or more of the following reasons :—

(i) Belated confirmation and delays in fixation of pay.

(ii) Non-finalisation of disciplinary action pending against the Government servants even after their retirement due to various causes.

(iii) Delay in verification of past services in respect of personnel transferred from other States.

(iv) Belated application from families of deceased Government servants without full data and non-production of legal heirship certificate, etc.

(v) Non-regularisation of certain periods of service.

(*c*) The Government are considering a scheme for imparting training to the subordinate staff dealing with pension cases in the subordinate offices, for the expeditious disposal of pension cases.

திரு. வை. சங்கரன் : இருநூறு கேஸ்களுக்கு மேலே பாக்கி இருப்பதாக, ஒரு வருஷமாக முடிவு அடையாமல் இருப்பதாகக் கூறினார்கள். பாக்கிப் பென்ஷன் காலாகாலத்தில் தரப்படாததால் அந்த ஏக்கத்தினால் அவர்களுடைய வாழ்நாள் கூட சீக்கிரம் முடிவு

அடைந்துவிடுகிறது. ஆகையால், குறைந்தது மூன்று நான்கு மாதங்களுக்குள்ளாவது அவற்றை எல்லாம் முடிவு செய்வதற்கு வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கூடியவரை சீக்கிரம் பென்ஷன் கொடுக்கவேண்டுமென்று கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஒரு ஆண்டிற்குமேல் தாமதம் ஆனது 282 கேஸ்கள் தான். ஆயிரக் கணக்கான கேஸ்கள் ஒரு ஆண்டிற்கு முன்னமேயே முடிவு செய்யப்பட்டுவிட்டன. தாமதம் ஆனதற்குக் காரணம் தெரிவித்தேன். அரசாங்கம் இதில் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது. இதைக் கவனிக்கின்ற அலுவலர்களுக்கு விசேஷ பயிற்சி அளிப்பதற்கு உத்தேசம் இருக்கிறது என்று முன்பு சொன்னேன்.

புலவர் கா. கோவிந்தன் : ஓய்வு பெறுகின்றவர்கள் யார், யார் என்று முன்கூட்டியே தெரியும். ஓய்வு பெறுகின்றவர்களுக்கு 6 மாதம் அல்லது ஒரு வருஷத்திற்கு முன் கூட்டியே பென்ஷன் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் எண்ணுகிறதா ? அப்படியானால், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஓய்வு பெறுவதற்கு முன்னமேயேதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஓய்வு பெற்ற ஆரம்ப ஆசிரியர்களுக்கு குறைந்தபட்சம் 20 ரூபாயாவது பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று ஏப்ரல் மாதத்திலிருந்தே அமலில் இருப்பதாக இதில் இருக்கிறது. ஆனால் இதுவரையில் அப்படி வழங்கப்படவில்லை என்று தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் அதற்கான காரணங்கள் என்ன ? அதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்காக உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இது அடுத்த கேள்வியைச் சேர்ந்தது. இப்போதே விடை அளிக்கிறேன். அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. அதன்படி பென்ஷன் அளிக்கப்பட்டிருக்கிறது.

கனம் சபாநாயகர் : அடுத்த கேள்வியின் பதிலையும் இப்பொழுதே சொல்லிவிடுங்கள்.

* 142 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the basis under which pension of retired teachers is calculated; and

(*b*) whether it will be based on the entries made in the Service Registers of the teachers?